மாணிக்கம் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவிப்பு நிறுவனம்

வருடாந்த அறிக்கை

2022

மாணிக்கம் மற்றும் ஆபரண ஆராய்ச்சி
மற்றும் பயிற்றுவிப்பு நிறுவனம்
“ருவன் செவன”
இல. 73 / 5 / ஏ,
வெலிவிட்ட
2023.02.28

கௌரவ அமைச்சர்
கைத்தொழில் அமைச்சு
த.பெ. 570,
73/1, காலி வீதி,
கொழும்பு - 03

கௌரவ அமைச்சர் அவர்களே,

வருடாந்த அறிக்கை 2022

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 (2) உப பிரிவின்படி பின்வரும் ஆவணங்களை தங்களுக்கு சமர்ப்பிக்கிறேன்.

1. 2022 ஆம் ஆண்டுக்கான மாணிக்கம் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவிப்பு நிறுவனத்தின் நிருவாக அறிக்கை
2. 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை.

இப்படிக்கு நம்பிக்கைக்குரிய

கையொப்பம்:

ஏ.எம். ரத்நாயக்க
தலைவர்
மாணிக்கம் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவிப்பு நிறுவனம்

தொலைநோக்கு, செயற்பணி

மற்றும்

குறிக்கோள்

தொலைநோக்கு

“மாணிக்கம் மற்றும் ஆபரண கைத்தொழிலின் மேம்பாடு மற்றும் அபிவிருத்திக்கு ஏற்புடையதான ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு பிராந்தியத்தில் மிகச் சிறந்த ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மத்திய நிலையமாக விளங்குதல்”

செயற்பணி

“மாணிக்கம் மற்றும் ஆபரண கைத்தொழிலை மிகவும் போட்டி ரீதியிலான திறன்களை வளர்ப்பதன் ஊடாக எமது வாடிக்கையாளர்ளுக்கு உச்சமட்ட சேவையை வழங்குவதற்குரிய புதிய மாணிக்க படிமங்களை அடையாளம்காண்பதற்கான ஆய்வு நடவடிக்கைகள், மாணிக்கம் மற்றும் ஆபரண கைத்தொழிலின் மேம்பாட்டுக்கான புத்தாக்கங்களை உருவாக்குதல் மற்றும் அவற்றின் பெறுமதியை அதிகரிக்கச் செய்வதற்கு ஏற்புடையதான கலை நுணுக்க மற்றும் தொழில்நுட்ப அறிவு மற்றும் திறன்கள் நிறைந்த ஊழியர்களை உருவாக்குதல் அத்துடன் கைத்தொழிலுக்கு ஏற்புடையதான செயலமர்வுகள், சஞ்சிகைகள், புத்தகங்கள் மற்றும் ஆராய்ச்சி நூற்களை வெளியிடுதல் ஆகியன எமது செயற்பணியாகும்”

குறிக்கோள்

“இலங்கையில் மாணிக்க கனிய வளச் சாத்தியத்தன்மை கொண்ட பிரதேசங்களில் அகழ்வாராய்ச்சிகளை மேற்கொண்டு நிலைபேறான விதத்தில் அகழ்ந்தெடுத்தல் மற்றும் புதிய தொழில்நுட்ப முறைகள் பற்றிய பயிற்சியுடன் கூடிய ஊழியர்களின் ஊடாக தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்தல்”

2.1 பணிப்பாளர் சபையின் உள்ளடக்கம்

2002 ஆம் ஆண்டினுள் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் உள்ளடக்கம் பின்வருமாறு.

01	திரு. ஏ.எம். ரத்நாயக்க	பணிப்பாளர் சபைத் தலைவர் 2022.06.27 தொடக்கம் இன்று வரை
02	பேராசிரியர் பீ.ஜீ.ஆர். தர்மரத்ன	பணிப்பாளர் சபைத் தலைவர் 2021.12.27 தொடக்கம் 2022.06.26 வரை
03	திரு. பீ.யூ.கே. தேனுவர	பணிப்பாளர் சபை அங்கத்தவர் 2021.01.31 தொடக்கம் 2022.12.31 வரை
04	திரு. ஆர்.எம்.டீ.கே.ஜீ.என்.பீ. ரணதுங்க	பணிப்பாளர் சபை அங்கத்தவர் 2021.10.14 தொடக்கம் 2022.03.31 வரை
05	திரு. கே.என்.பீ. ஜயரத்ன	பணிப்பாளர் சபை அங்கத்தவர் 2022.04.01 தொடக்கம் இன்று வரை
06	டாக்டர் செனரத் ஹேவகே	பணிப்பாளர் சபை அங்கத்தவர் 2022.03.08 தொடக்கம் 2022.12.31 வரை
07	திருமதி பிரபா மலலசேகர	பணிப்பாளர் சபை அங்கத்தவர் 2020.01.22 தொடக்கம் 2022.12.08 வரை
08	திரு. எஸ்.ஜீ.எல். பர்னாந்து	பணிப்பாளர் சபை அங்கத்தவர் 2022.12.08. தொடக்கம் இன்று வரை
09	திரு. எஸ.ஏ.டபிள்யு.கே. ஜயசேகர	பணிப்பாளர் சபை அவதானிப்பாளர் (அமைச்சு பிரதிநிதி) 2022.01.31 தொடக்கம் இன்று வரை

உயர் முகாமைத்துவம்



திரு.ஏ.எம்.ரத்னாயக்க

தலைவர்

(இருந்து 27.06.2022 to date)



பேராசிரியர்.பி.ஜி.ஆர்.தர்மரத்ன

தலைவர்

(இருந்து 27.12.2021 to date)
BASc (SL),MSc (Newcastle),



திரு.வி.ஜி.ஆர்.டப்ளியூ.வசந்த கம்லாத்

பொது இயக்குனர்(Acting)

(இருந்து 23.11.2021 to date)
MSC (Gem),B.Sc (SP) (Physics) FGA,



திரு.வி.ஜி.ஆர்.டப்ளியூ.வசந்த கம்லாத்

இயக்குனர்
(பயிற்சி மற்றும் பாடதிட்ட மேம்பாடு)
MSC (Gem),B.Sc (SP) (Physics) FGA,
MGA (SL),MBA(Reading)



திரு.ஆர்.எம்.என்.பி.கே.நலின் ஜயசிங்க

இயக்குனர்(ஆராய்ச்சி) / Acting

M.Phil(Gem.),M.Sc(GIS & RS),B.Sc.
(Geology),MIGSL,MGSSL,MGASL



திரு.எஸ்.எல்.ஜே.முகந்திரம்

உதவி இயக்குனர் (நிதி)

MPAcc(USJP),B.com (SP)Accountancy 2nd
lower Hons (USJP),CBA(ICASL),ADV.Cer
(Procurment)(ICTAD



திருமதி.டபள்யூ.எல்.பிரசங்கிகா சுரேந்திர

உதவி இயக்குனர்
(நீர்வாகம் மற்றும் மனிதவளம்) / Acting
B.Sc. Chemistry (Special)(USJP)
B.des,Jew(Sp)(UOM)

- **விளம்பர நிழ்ச்சித்திட்டங்கள்.**

நிறுவனத்தின் சேவைகள் பற்றி மக்களுக்கு பிரசாரம் செய்கின்ற நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பிப்பதற்கான இயலுமை காணப்படுகின்றது. இதன் பொருட்டு விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள், இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் பற்றிய சஞ்சிகைகள், பிரசுரங்கள், ஒலி/ஒளி விளக்க சமர்ப்பணங்கள் ஆகியவற்றுக்கான வாய்ப்புகளும் காணப்படுகின்றன.

3.2. சவால்கள்

- **உட்கட்டமைப்பு வசதிகள்**

நவீன கருவிகள் மற்றும் இயந்திர சாதனங்களை பயிற்சி அலகுகளுக்கு அறிமுகப்படுத்தி அதன் மூலம் கைத்தொழிலின் வளர்ச்சிக்குத் தேவையான பயிற்சி, அறிவு, மற்றும் திறன்களை வழங்குவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஆபரணங்கள் பயிற்சி நிலையங்களில் மாணிக்கம் பட்டைதீட்டல் அலகு, மாணிக்க ஆய்வுகூடம் ஆகியவற்றுக்கு மிக முன்னேற்றகரமான இயந்திர சாதனங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். மேலும் உலோகங்களின் தரத்தை நிர்ணயிக்கும் ஒரு அலகு நிறுவப்பட்டு அதனுடன் தொடர்புடைய கற்கைநெறிகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். வைரம் வெட்டுதல் இந்தக் கைத்தொழிலில் ஒரு சிறப்பியல்பான கைத்தொழிலாக உள்ளதால் அதற்கான ஒரு பயிற்சி அலகு தாபிக்கப்பட்டு அறிவை வழங்குதல் மற்றும் அது சார்ந்த அபிவிருத்திப் பணிகளுக்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

- **பௌதீக வளங்கள்.**

நிறுவனத்தின் ஆராய்ச்சிகள் மற்றும் பயிற்சித் துறையின் பணிகளை விரிவான மட்டத்தில் முன்னெடுக்கத் தேவையான வாகனங்களின் பற்றாக்குறை காணப்படுகின்றது. மேலும் தற்காலத் தேவைப்பாடுகளுக்கு ஏற்ற விதத்திலான ஆய்வுகூட வசதிகளும் மேம்படுத்தப்பட வேண்டியுள்ளன.

- **தொழிலாளர்களின் பலவீனமான மனப்பான்மைகள்**

சமீப காலமாக ஊழியர்கள் எதிர்மறை மனப்பான்மையைக் கொண்ட மனநிலையுடன் காணப்படுகின்றனர்.

- **இணை நிறுவனங்களாலும் எமது சேவைகளே மேற்கொள்ளப்படுதல்**

உதா: எமது பயிற்சி நடவடிக்கைகள், ஆய்வுகூட சேவைகள் ஆகியன

- **மனித வளம்.**

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் திட்டத்தின் பிரகாரம் எமது நிறுவனத்திற்கான பணியாட்டொகுதி 136 ஆகுமென்பதோடு தற்போது சேவையில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 65 ஆகும். நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிப் பணியாட்டொகுதியினருக்கு உள்நாட்டு ரீதியில் காணப்படுகின்ற பயிற்சி வாய்ப்புகள் வரையறுக்கப்பட்டு உள்ளதாலும் இத்துறையில் துறைசார் அறிவைக் கொண்ட உத்தியோகத்தர்கள் குறைவாயுள்ளதாலும் பயிற்சி வாய்ப்புகளுக்கு ஆற்றுப்படுத்துவதற்குள்ள வாய்ப்புகளும் குறைவாயுள்ளதால் எமது பணியாட்டொகுதியினர் தற்போதைய கைத்தொழிலின் கேள்வியை நிறைவு செய்வதற்குப் போதுமானதல்ல என்பது புலனாகின்றது. இது கைத்தொழிலின் எதிர்காலத்திற்கு சாதகமானதல்ல என்பதோடு, நிறுவனத்தின் பயிற்சிக்கான கேள்வி

குறைவடைவதற்கும் ஏதுவாக அமையலாம். நிறுவனத்தின் பணியாளர்களுக்கு இயலுமானவரை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் இந்நிலைமைக்கு தீர்வுகாண முடியும்.

- **நிதி வளங்கள்**

  தற்போதைய நிலைமைகளுக்கமைய ஒரு பரந்த அளவில் நிறுவனத்தின் பணியைச் செய்வதற்கு போதுமான நிதியங்களுக்கு திறைசேரியின் பங்களிப்பு குறைந்த மட்டத்தில் காணப்படுவதோடு, அதற்கான தகுந்த செஸ் வரி முறையொன்றும் இதுவரை தயாரிக்கப்படவில்லை.

- **தனியார் துறை பயிற்சி நிறுவனங்கள் உருவாகியுள்ளமை**

  மாணிக்கம் மற்றும் ஆபரண கைத்தொழிற்துறைக்கான கல்வி நடவடிக்கைகளின் பொருட்டு தனியார் துறையின் தலையீடு படிப்படியாக விருத்தியடைந்துள்ளது.

- **கைத்தொழில் துறையில் சில பிரிவுகளுக்கான ஊக்குவிப்புகள் காணப்படாமை.**

  உதா: இரத்தினக்கல் வெட்டும் சேவைப் பிரிவு

4. பணிப்பாளர் சபை அறிக்கை

4.1 குறிக்கோள்

1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய மாணிக்கம் மற்றும் ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் 25 (1) ஆம் பிரிவின்படி 1995 ஆம் ஆண்டு ஜூலை 28 ஆம் திகதிய 882 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் மாணிக்கம் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் நிறுவப்பட்டது. ஆராய்ச்சி மற்றும் பயிற்சி வசதிகளை வழங்குவதன் மூலம் மாணிக்கம் மற்றும் ஆபரண கைத்தொழிற்துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல், மேம்பாடுகள் மற்றும் அபிவிருத்தி ஆகியன நிறுவனத்தின் பிரதானமான குறிக்கோள்கள் ஆகும்.

4.2 நிறுவனத்தின் அதிகாரங்கள்

இலங்கையில் மாணிக்க கனிப்பொருள் மற்றும் மாணிக்க படிமங்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் அதனுடன் தொடர்புடைய பின்வரும் விடயங்கள் தொடர்பாக விஞ்ஞான ரீதியிலான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.

1. இலங்கையின் மாணிக்க கனிப்பொருள் பற்றிய மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.

   (அ) அமைவிடம்
   (ஆ) அடையாளம்காணல்
   (இ) மாணிக்கக் கற்களின் பெறுமதியை அதிகரிக்கச் செய்யும் முறைகள்.
   (ஈ) வேறு சம்பந்தப்பட்ட துறைகள் மற்றும் ஏற்புடைய மாணிக்கவியல் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.

2. சுரங்க அகழ்வு, மாணிக்கம் பட்டைதீட்டல், ஆபரணங்கள் உற்பத்தி, மாணிக்க பரிகாரத்திற்கான முறைகள் மற்றும் ஆபரணங்கள் தயாரிப்பு போன்ற துறைகளில் மாணிக்கம் மற்றும் ஆபரண கைத்தொழிலின் அபிவிருத்திக்கான இயந்திர சாதனங்களின் உற்பத்தி உள்ளிட்ட தொழில்நுட்ப மற்றும் பிற ஆலோசனைகளை வழங்குதல்.

3. (அ) மாணிக்கம் பட்டைதீட்டல்
   (ஆ) ஆபரண உற்பத்தி
   (இ) வைரம் உள்ளிட்ட மாணிக்கவியல்
   (ஈ) ஆபரண வடிவமைத்தல்
   (உ) மாணிக்கக்கற்களின் பெறுமதியை அதிகரிக்கச் செய்தல்

(ஊ) மாணிக்கம் மற்றும் ஆபரணக் கைத்தொழில் தொடர்பான பிற விடயங்கள் தொடர்பில் பயிற்சிகளை பெற்றுக்கொடுத்தல்.

4. செயலமர்வுகள், கருத்தரங்குகள் நடத்துதல் மற்றும் குறித்த தலைப்புகள் மற்றும் ஆற்றப்பட்ட பணிகள் பற்றிய பிரசுரங்கள் மற்றும் புத்தகங்களை வெளியிடல்.

5. நிறுவனத்தின் காரியங்களை உரியவாறு நிறைவேற்றுவதற்குத் தேவையான வேறு விடயங்களை மேற்கொள்ளல்.





பயிற்சி பிரிவு







5. பயிற்சிப் பிரிவு

மாணிக்கம் மற்றும் ஆபரண கைத்தொழிலிய் ஊடாக உருவாக்கப்படுகின்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வருமான இலக்குகளை நிறைவேற்றிக்கொள்வதற்குத் தேவையான அறிவு மற்றும் திறனைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடன் அதனூடாக சுரங்க அகழ்வு தொடக்கம் சர்வதேச சந்தைக்கு உற்பத்திகளை அறிமுகப்படுத்தி வைத்தல் வரையிலான பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை வழிநடத்துதல் பயிற்சிப் பிரிவின் பிரதானமான குறிக்கோளாகும்.


2022 ஆம் ஆண்டில் பயிற்சிப் பிரிவு பாடநெறிகள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குதல் பற்றிய முன்னேற்றம்

5.1 தொழில்சார் கல்வியை இலக்காகக்கொண்ட பயிற்சிப் பாடநெறிகளை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்

சுரங்க அகழ்வுத் தொழில்நுட்பம் தொடக்கம் இக்கைத்தொழில் சார்ந்த உற்பத்திகளுக்கு பெறுமதி சேர்க்கும் செயன்முறைகள் உள்ளடங்கிய பாரிய அளவிலான உற்பத்திகளை சர்வதேசத்திற்கு அறிமுகப்படுத்தல் வரையிலான விடயப்பரப்பை உள்ளடங்கியவாறு பயிற்சிப் பிரிவினால் தொழில்சார் திசைமுகப்படுத்தப்பட்ட மற்றும் தொழில் திசைமுகப்படுத்தப்பட்ட பயிற்சிப் பாடநெறிகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. நிறுவன சான்றிதழ் மட்டம், தேசிய தொழில்சார் தகைமைத் தரநியம மட்டத்திற்கு ஏற்புடைய NVQ 3 – 4 மட்டம் மற்றும் டிப்லோமா மட்டத்தின் NVQ 5 மட்டத்திற்கு ஏற்புடையதான பாடநெறிகள் இதன் கீழ் நிறுவனத்தினால் அமுலாக்கப்படுவதற்கு 2022 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.


கடந்த மூன்று ஆய்டு காலமாக உலகளாவிய ரீதியில் எதிர்நோக்குவதற்கு நேரிட்ட பல்வேறு அச்சுறுத்தல்கள் காரணமாகவும் அதேபோன்று உள்நாட்டு ரீதியில் உருவாகிய பல்வேறு சமூக பொருளாதார பிரச்சினைக்கு முன்னே மிக சிரமத்துடன் கூடியதாக நிறுவனத்தினால் பயிற்சிப் பாடநெறிகளை நடத்துவதற்கு நடவடிக්கை எடுக்கப்பட்டதோடு, 2022 ஆம் ஆண்டிலும் பயிற்சிப் பிரிவுக்கு முந்திய ஆண்டினுள் ஆரம்பிக்கப்பட்ட அநேகமான பல பாடநெறிகளை நடத்துவதற்கு நேரிட்டது. அதன் காரணத்தினால் முந்திய ஆண்டுகளுக்கு ஒப்பீட்டளவில் 2022 ஆம் ஆண்டில் பயிற்சியளிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை 550 ஆகும். ஆயினும் பயிற்சிப் பிரிவு மனித வளத்தை மிகவும் வினைத்திறன்மிக்க விதத்தில் வழிநடத்துவதற்கான ஆற்றலைப் பெற்றமையால் அதன் ஊடாக 2022 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட நிலைமையைத் தாண்டி 826 மாணவர்களுக்கு பயிற்சியளிப்பதற்கு பயிற்சிப் பிரிவுக்கு இயலுமை கிடைத்துள்ளது. இதற்கமைய 2022 ஆம் ஆண்டில் பயிற்சிப் பிரிவினால் பாடநெறிகள் அமுலாக்கப்பட்டதன் ஊடாக நிறுவனத்திற்கு உருவாக்கிக் கொடுக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 16.3 மில்லியனாகும்.

5.1.1 2017 ஆம் ஆண்டிலிருந்து 2022 வரை பயிற்சிப் பாடநெறிக்கான மாணவர் ஆட்சேர்ப்பின் முன்னேற்றம்



ஆண்டு	மாணவர் ஆட்சேர்ப்பின் முன்னேற்றம்	பாடநெறியை நிறைவு செய்த மாணவர் எண்ணிக்கை
2017	1200	768
2018	1220	782
2019	1165	665
2020	465	194
2021	286	137
2022	846	217


5.1.2 2017 ஆம் ஆண்டிலிருந்து 2022 வரை பயிற்சிப் பாடநெறிகளை நடத்தியதன் ஊடாக ஈட்டப்பட்ட வருமான வளர்ச்சியின் முன்னேற்றம்



ஆண்டு	வருமானம் ரூபா மில்லியன்
2017	8.78
2018	11.55
2019	13.17
2020	12.82
2021	3.74
2022	16.3

5.2 கைத்தொழில் சார்ந்த பயிற்சி அறிவை நாடளாவியதாக வழங்கும் பொருட்டு நிலையங்களை திட்டமிடல்

தற்போது தொழிற்பயிற்சிக் கல்வி தொடர்பில் இளம் சந்ததியினரிடையே அதிகளவு ஆர்வத்தைக் காணக்கூடியதாக ஒரு துறையாக தொழிற்பயிற்சிக் கல்வித் துறையைக் குறிப்பிடலாம். அதன்படி இந்நிலைமையை நன்றாக அடையாளம்கண்டு உள்நாட்டு பொருளாதார வளர்ச்சிக்கு கைத்தொழில் பிரிவிலிருந்து கிடைக்கின்ற பங்களிப்பை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு மிக முதன்மையானதொரு கைத்தொழில் துறையான மாணிக்கம் மற்றும் ஆபரணக் கைத்தொழில் சார்ந்த தொழில் துறைகளை வளர்ச்சியடையச் செய்யும் பொருட்டு நாடு முழுவதிலும் பரவியுள்ளவர்களை இலக்காகக் கொண்டு 2022 ஆம் ஆண்டில் பாடநெறிகளை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



இதன் கீழ் கடுவலை தலைமை அலுவலகத்தை மையமாகக் கொண்டு இரத்தினபுரி, கண்டி, காலி, யாழ்ப்பாணம், அத்தனகல்ல, மட்டக்களப்பு, நாஉல, சேனபுர, இரத்தினபுரி இளைஞர் சேவை மன்றம் ஆகிய புதிய 10 நிலையங்களை 2022 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக பேணிக் கொண்டுநடாத்துவதற்கு இப்பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது. நிறுவனத்தில் தற்போது காணப்படுகின்ற பிரதேச பயிற்சி நிலையங்கள் பின்வருமாறு.

01. கொழும்பு
02. இரத்தினபுரி
03. கண்டி
04. காலி
05. யாழ்ப்பாணம்
06. மட்டக்களப்பு
07. நாஉல
08. அத்தனகல்ல
09. சேனபுர
10. இரத்தினபுரி இளைஞர் சேவை மன்றம்

❖ **சேனபுர தொழிற் கல்வியறிவு பயிற்சி நிலையத்தில் புதிய பயிற்சி நிலையமொன்றை ஆரம்பித்தல்**

புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகம் அலுவலகனத்தின் வேண்டுகோளின் பேரில் போதை வஸ்துக்களுக்கு அடிமையாகி வெலிகந்த சேனபுர தொழிற் கல்வியறிவு பயிற்சி நிலையத்தில் புனர்வாழ்வளிக்கபடுகின்ற இளைஞர்களுக்கு மாணிக்கம் வெட்டும் தொழிற்பயிற்சியை பெற்றுக் கொடுத்தல் தொடர்பில் நிறுவனத்தின் மாணிக்கம் வெட்டும் ஒரு பயிற்சி அலகை சேனபுர தொழிற் கல்வியறிவு பயிற்சி நிலையத்தின் வளவில் ஆரம்பித்து வைப்பதற்கு 2022 ஆம் ஆண்டில் இயலுமாயிருந்தது.

❖ **இரத்தினபுரி இளைஞர் சேவை மன்றத்தில் ஒரு நிலையத்தை தாபித்தல்**

தொழிற்பயிற்சி நிறுவனங்கள் அனைத்துடனும் கைகோர்த்து நாட்டினுள் பரவியுள்ள அனைத்து மனித மற்றும் பௌதீக வளங்களையும் பயன்படுத்தி மாணிக்கம் மற்றும் ஆபரண கைத்தொழிலுக்கு போதியளவு திறன்வாய்ந்த தொழில்நுட்பக் கலைஞர்களை உருவாக்கும் பொருட்டு நடவடிக்கை எடுக்கின்ற நிறுவன எண்ணக்கருவின்படி இரத்தினபுரி இளைஞர் சேவை மன்றத்துடன் இணக்கப்பாட்டுக்கு வந்து அந்த நிலையத்தின் வளவில் நிறுவனத்தின் பயிற்சி நிலையமொன்றை ஆரம்பித்து வைப்பதற்கான இயலுமை 2022 ஆம் ஆண்டில் கிடைத்தது.

5.3 மாணிக்கம் மற்றும் ஆபரணக் கைத்தொழிலுடன் தொடர்புடையதாக அமுலாக்கப்பட்ட பயிற்சிப் பாடநெறிகள்

கடந்த மூன்று ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் பூராவும் உலகளாவிய ரீதியிலும் உள்நாட்டு ரீதியிலும் உருவாகிய பல்வேறான சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைகளுடன் கூடிய நிலைமைகளுக்கு நிறுவனத்திற்கும் பொதுவாக முகம் கொடுக்க நேரிட்டதன் காரணமாக பின்னடைவு நிலைமைக்கு உள்ளான நிறுவனத்தின் பாடநெறி அபிவிருத்திப் பணிகளில் மீளப் பிரவேசிப்பதற்கு இப்பிரிவு இவ்வாண்டில் அதிக கவனத்தை செலுத்தியது. இதன்படி கைத்தொழில் சார்ந்ததாக எப்போதும் மாற்றத்திற்கு உள்ளாகின்ற துறைகள் தொடர்பில் மற்றும் தொழில் வாய்ப்புகள் அதிகளவில் காணப்படுகின்ற துறைகள் தொடர்பில் அதிக சார்புத் தன்மையை பெற்றுக்கொடுப்பதற்கு இயலுமானவாறு பயிற்சிப் பாடநெறிகளை நடத்துதல் தொடர்பில் அதிக கவனம் இந்த ஆண்டிலும் செலுத்தப்பட்டதோடு அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி பயிற்சிப் பிரிவுக்கு சொந்தமான மனித மற்றும் பௌதீக வளங்களை உச்ச அளவிலும் மிகச் சிறந்த முறையிலும் முகாமைத்துவம் செய்து தற்கால இளம் சந்ததியினரும் அதிக கவர்ச்சியைச் செலுத்துகின்ற தொழில்நுட்பத்தைக் கடைப்பிடித்து பின்வரும் பாடநெறிகளை 2022 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு நிறுவனத்தினால் இயலுமாயிருந்தது.

5.3.1 மாணிக்கத் துறை சார்ந்ததாக அமுலாக்கப்பட்ட பயிற்சிப் பாடநெறிகள்

ஆரம்ப மாணிக்கவியல்
மாணிக்கவியல்
கலப்பின மாணிக்கவியல் Blended Gemmology
கெவுடா வெப்பப் பரிகாரம்
மாணிக்க நிறத் தரப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல்
மாணிக்கம் வெட்டல் மற்றும் பட்டை தீட்டல் NVQ 3 / 4
மரிக்கம் வெட்டல் குறுகியகால பாடநெறி
மாணிக்க வேலைப்பாடு மற்றும் மணி ஆபரண உற்பத்தி

5.3.2 ஆபரணத் துறை சார்ந்ததாக அமுலாக்கப்பட்ட பயிற்சிப் பாடநெறிகள்

ஆபரண வடிவமைப்பு உருவாக்கம்
கனணி சார்ந்த ஆபரண வடிவமைப்பு உருவாக்கம்
நவநாகரிக ஆபரண உற்பத்தி
ஆபரண உற்பத்தி NVQ 3 / 4
ஆபரணங்களுக்கு கல் பதித்தல் NVQ 3

பயிற்சிப் பாடநெறி	கொழும்பு	இரத்தினபுரி	கண்டி	காலி	அத்தனகல்ல	மட்டக்களப்பு	நாவல	சேனரா	இரத்தினபுரி இளைஞர் படையணி	பாடநெறியை கற்ற மாணவர் எண்ணிக்கை
மாணிக்கவியல் டிப்ளோமா	-	13	-	-	-	-	-	-	-	13
ஆரம்ப மாணிக்கவியல்	81	64	-	-	-	-	-	-	-	145
கலப்பின மாணிக்கவியல்	22	-	-	-	-	-	-	-	-	22
மாணிக்கவியல்	83	56	-	-	-	-	-	-	-	139
குறுகியகால மாணிக்கவியல்	02	9	-	-	-	-	-	-	-	11
கெவுடா வெப்பப் பரிகாரம்	16	86	-	-	-	-	-	-	-	102
மாணிக்க நிறத் தரப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல்	-	24	-	-	-	-	-	-	-	24
மாணிக்கம் வெட்டல் 10 நாள் பாடநெறி	05	11	-	-	-	-	3	-	-	19-
மாணிக்கம் வெட்டல் மற்றும் பட்டை தீட்டல்	30	88	46	-	-	-	17	29	11	221
மாணிக்க வேலைப்பாடு	-	7	-	-	-	-	-	-	-	7
ஆபரண வடிவமைப்பு உருவாக்கம்	21	17	20	11	-	-	-	-	-	69
கனணி சார்ந்த ஆபரண வடிவமைப்பு உருவாக்கம்	17	-	-	-	-	-	-	-	-	17
விசேட கனணி சார்ந்த ஆபரண வடிவமைப்பு உருவாக்கம் குறுகியகால	01	-	-	-	-	-	-	-	-	01
நவநாகரிக ஆபரண உற்பத்தி	-	15	-	-	-	-	-	-	-	15
ஆபரண உற்பத்தி	03	-	-	-	12	8	-	-	-	23
குறுகியகால ஆபரண உற்பத்தி	03	-	-	-	-	-	-	-	-	3
ஆபரணங்களுக்கு கல் பதித்தல்	16	14	-	-	-	-	-	-	-	30
முழு மொத்தம்	**300**	**404**	**66**	**11**	**12**	**8**	**20**	**29**	**11**	**861**

5.4 மாணிக்க மற்றும் ஆபரண கைத்தொழில் சார்ந்த ஏனைய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்கல்

5.4.1 துல்லியமான (precision Cutting) மாணிக்கம் வெட்டல் முறைகளை கட்டியெழும்பும் புதியதொரு பயிற்சி அலகை தாபிக்க திட்டமிடல்

உள்நாட்டு ரீதியில் சிறிய அளவிலான மாணிக்கக் கற்கள் தாராளமாகக் கிடைத்த போதிலும் மிக உயர் துல்லியத்தன்மையுடன் ($\pm$0.002) கூடியதாக விஞ்ஞான ரீதியில் அத்தகைய மாணிக்கத்தை வெட்டிப் பட்டை தீட்டும் தொழில்நுட்பம் கைத்தொழிலினுள் பரவியில்லாததன் காரணமாக விஞ்ஞான ரீதியில் துல்லியத்தன்மையுடன் கூடியதாக இத்தகைய மாணிக்கத்தை வெட்டிப் பட்டை தீட்டும் தொழில்நுட்பத்தை கைத்தொழிலுக்கும் அதில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் அறிமுகப்படுத்தும் பொருட்டு புதிய பயிற்சிப் பாடநெறி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு ஏற்புடையதான ஒரு கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி கருத்திட்டம் நாட்டினுள் தற்போது பயன்படுத்தப்படாத மற்றும் பெறுமதி சேர்த்தலுக்கு உள்ளாகாத சிறிய அளவிலான மாணிக்கத்தை பெருமளவில் உற்பத்தி செய்வதற்கான பின்னணியை உருவாக்கும். இதன் ஊடாக பெருமளவு தொழில்கள் பிரதேச ரீதியிலும் வீடுகளைச் சார்ந்ததாகவும் உருவாகும். இதன்படி நேரடியாகவும் மறைமுகமாகவும் பல நலன்களை பொருளாதார ரீதியில் அடையப்பெறுவதற்கான வாய்ப்பு உருவாகும்.

5.4.2 பயிற்சி பாடநெறிகளுக்கு தேசிய தொழில் தகைமைத் தராதர மட்டத்தை அமைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்

மாணிக்கம் மற்றும் ஆபரண விடயத் துறைக்கு ஏற்புடையதாக கீழே குறிப்பிடப்படுகின்ற பயிற்சிப் பாடநெறிகளுக்குத் தேவையான தேசிய தொழிலி திறன் தரநியம மட்டத்தை (NVQ) அமைத்துக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் தொடர்பில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவுக்கு தேவையான ஆவணங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதோடு தற்போது தேசிய பயிலுனர் மற்றும் பயிற்சி ஆணைக்குழுவால் மேற்படி பாடநெறிக்குத் தேவையான திறன் அங்கீகாரத்தை வழங்குவதற்கு ஏற்புடையதான களப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆபரண வடிவமைப்பு உருவாக்கம்	-	NVQ 4
மாணிக்கம் அடையாளம்காணல்	-	NVQ 4
மாணிக்கவியல்	-	NVQ 5
மாணிக்கம் வெட்டல் மற்றும் பட்டைதீட்டல்	-	NVQ 5

மேற்படி பயிற்சிப் பாடநெறிக்கு ஏற்புடைய திறன் அங்கீகாரத்தை அமைத்துக் கொள்ளும் நடவடிக்கையின் பொருட்டு தொழில்சார் தொழிலிநுட்பவியல் பல்கலைக்கழகத்துடன் இணைந்து பாடநெறிகளை நடத்துவதற்கு ஏற்புடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

வியாபார முகாமைத்துவம் விடயம் பற்றிய மொடியுல் ஒன்றை உள்ளடக்குவதற்காக மாணிக்கம் வெட்டல், மாணிக்கவியல் மற்றும் ஆபரண உற்பத்தி பாடவிதானத்தை மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கை 2022 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

5.4.3 தரநியம முகாமைத்துவ முறைமை ஒன்றை தாபித்தல்

தரமான பயிற்சி மற்றும் கல்வி முறைமையொன்றை பேணிவரும் பொருட்டு சர்வதேச தரநியமங்களுக்கு இணங்க ISO 9002 க்கு அமைய நிறுவனத்தினு ள் தரநியம முகாமைத்துவ முறைமை ஒன்றை தாபிப்பதற்கு தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் முந்திய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டதோடு, அதற்கமைய நிறுவனத்தினுள் மேற்படி தரநியமங்களுக்கு இணங்க பயிற்சிப் பிரிவின் பணிகளை அமுல்படுத்தல் 2022 ஆம் ஆடினுள் மேற்கொள்ளப்பட்டது.



5.4.4 சான்றிதழ் வழங்கும் வைபவம் ஒன்றை நடத்துதல்

தொழில்சார் மாணிக்கவியல் டிப்ளோமா பாடநெறி மற்றும் தேசிய தொழில் தகைமை தராதர மட்டம் 4 இன் கீழ் பயிற்சிப் பாடநெறிகளைக் கற்ற 150 பயிலுனர்களுக்கு நிறுவனத்தினுள் முதற் தடவையாக உயர்ந்த விதத்தில் சான்றிதழ் வழங்கும் வைபவம் 2022 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.



5.4.5 பாடநெறி பிரசார மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

2022 ஆம் ஆண்டை மையமாகக் கொண்டு நிறுவனத்தினால் அமுலாக்கப்படுகின்ற பயிற்சிப் பாடநெறிகளுக்கு பயிலுனர்களை அடையாளம்காண்பதற்காக பாடநெறி மேற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் சில அமுலாக்கப்பட்டன. இதன் கீழ் சுயாதீன தொலைக்காட்சி சேவையில் "தொரமடலாவ" விவாத ரீதியிலான கலந்துரையாடல் நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக இத்துறை தொடர்பில் வெளிவாரி சமூகத்தின் அறிவை அதிகரிக்கச் செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடல் மற்றும் மாகாண மேம்பாடு, பிரசார இயக்கம் மற்றும் சமூக ஊடகங்களை அடிப்படையாகக் கொண்ட பிரசார நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

5.4.6 மாணிக்கம் மற்றும் ஆபரண கைத்தொழிலின் நிலைபேறான இருப்பை முன்னிட்டு தொழில்நுட்ப செயலமர்வுகளை நடத்தல்



பாரம்பரிய கைத்தொழிலாளர்களுக்கு நவீன தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக்கொடுக்கும் பொருட்டு கைத்தொழில் சார்ந்த தொழில்நுட்ப செயலமர்வுகள் கம்பஹா, கேகாலை, மாத்தளை ஆகிய பிரதேசங்களை மையமாகக் கொண்டு நடத்தப்பட்டது.


மாணிக்க வேலைப்பாடு மற்றும் நவநாகரிக ஆபரண உற்பத்தி பல்வகைப்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கியின் வளப் பங்களிப்புடன் கருத்திட்ட அங்கத்தவர்கள் மற்றும் பழைய மாணவர் கைத்தொழிலாளர்களுக்கு இரத்தினபுரி நிலையத்தில் கடன் திட்டம் மற்றும் நிதி முகாமைத்துவம் பற்றிய விழிப்புணர்வூட்டல் செயலமர்வொன்றை 2022 ஆம் ஆண்டில் நடத்துவதற்கு இயலுமாயிருந்தது.


அதேபோன்று ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்துடன் ஒருங்கிணைந்து பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் பட்டப்படிப்பை மேற்கொள்பவர்களுக்காக மரிக்கம் வெட்டல் பயிற்சிச் செயலமர்வொன்று நடத்தப்பட்டது.

5.4.7 பயிற்சிப் பாடநெறிக் கற்கை சுய உதவிக்கான நூல்களை அச்சிடல்

மாணிக்கவியல்
கெவுடா வெப்பப் பரிகாரம்
மாணிக்கம் வெட்டல் மற்றும் பட்டைதீட்டல்
ஆபரண உற்பத்தி

பயிற்சிப் பாடநெறிகளுக்கான மேலதிக உயர் அறிவைப் பெற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் அச்சிடப்பட்ட விரிவான விபரங்கள் மற்றும் தகவல்கள் உள்ளடங்கிய புத்தகங்களை அச்சிடுவதற்கும் மேற்படி புத்தகங்களை பயிலுனர்களுக்கு குறிப்பிட்டதொரு சலுகைத் தொகையொன்றை வழங்கி விற்பனை செய்வதற்கும் 2022 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு மேற்படி புத்தகங்களுக்கு பயிலுனர்களிடையே பெருமளவு விருப்பமும் கேள்வியும் காணப்படுதல் அடையாளம்காணப்பட்டுள்ளது.








ஆராய்ச்சி பிரிவு
LEIC
5x

6. 2022 ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்

6.1 கருத்திட்டம் : - இலங்கையில் மாணிக்கப் படிமங்களின் அகழ்வாராய்ச்சி மற்றும் மதிப்பீடு

மேற்படி கருத்திட்டம் இலங்கையில் காணப்படும் மாணிக்க படிமங்களை தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்வதற்கும் அதேபோன்று 1:50,000 அளவுத்திட்டத்துடன் கூடிய வரைபடக் கோப்பொன்றை தயாரிப்பதற்காக பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் அமுலாக்கப்படுகின்றது. இதன்போது ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்திற்கும் ஏற்புடைய மாணிக்க சாத்தியத்தன்மை வரைபடம் மற்றும் தொழில்நுட்ப அறிக்கை வெளியிடப்படும். 2021 ஆம் ஆண்டில் காணப்பட்ட COVID 19 தொற்றுநோய் நிலைமையின் முன்னே போக்குவரத்து மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்த காரணத்தினால் நிறைவு செய்ய இயலாமலிருந்த நியாகம மற்றும் கிரிஎல்ல ஆகிய இரண்டு பிரதேச செயலாளர் பிரிவுகளில் கள ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு ஆய்வுகூடப் பகுப்பாய்வுக்குத் தேவையான மண் மாதிரிகள் பெறப்பட்டன. அந்த மண் மாதிரிகளின் ஆய்வுகூடக் கற்கைகளின் மூலம் பெறப்பட்ட பெறுபேறுகள் மற்றும் புவியமைப்பு மற்றும் புவிச் சரிதவியல் தரவுக் கற்கைகளின் மூலம் பெறப்பட்ட தகவல்களின்படி மாணிக்க சாத்தியத்தன்மைகளுடன் கூடிய பிரதேசங்கள் அடையாளம் காணப்பட்டன.

6.1.1 நியாகம பிரதேச செயலாளர் பிரிவு

இப்பிரிவினுள் நியாகம தெற்கு, ஹொரன்கல்ல மற்றும் தல்கஸ்வல பிரதேசங்கள் சார்ந்ததாக மாணிக்க அதிசாத்தியத்தன்மை வலயங்கள் அடையாளம்காணப்பட்டுள்ளன. இப்பிரதேசத்தினுள் வைரோடி, பசிங்கல் ஆகிய மாணிக்க இனங்கள் பெருமளவில் கிடைக்கின்றன.



(அ) (ஆ) (இ)

படம் 01 – (அ) மற்றும் (ஆ) மாணிக்க படிம மட்டங்கள் அமைகின்ற விதம்
(இ) பசிங்கல் (alexandrite) மற்றும் கனக (chrysoberyl) மாணிக்கத் துணிக்கைகளின் நுண்காட்டி அவதானிப்பு

2022 இறுதிக் காலாண்டினுள் நிதி ஏற்பாடுகள் இன்மையின் காரணமாக நியாகம பிரதேச செயலாளர் பிரிவினுள் திட்டமிடப்பட்ட கள ஆய்வுகளை நிறைவு செய்வதற்கு இயலாமலிருந்தது. இக்கருத்திட்டத்தை 2023 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டினுள் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

6.1.2 கிரிஎல்ல பிரதேச செயலாளர் பிரிவு

இப்பிரிவினுள் கள ஆய்வு ஏறத்தாழ 70மூ நிறைவு செய்யப்பட்டுள்ளது. இதன்போது எபிட்டவல, யட்டிபஹ"வ, எல்லகாவ, தந்திரியாவத்த, கலதுர, மடபத்தர, முதுன்கொட்டுவ, தொடம்பே, நெதுன்வெஹர ஆகிய பிரதேசங்களைச் சார்ந்ததாக மாணிக்க அதிசாத்தியத்தன்மை வலயங்கள் அடையாளம்காணப்பட்டுள்ளன. களுகங்கை சார்ந்ததாக நீர்ம மாணிக்க படிமங்கள் மற்றும் தங்கப் படிமங்கள் அமைந்துள்ளதோடு குருகங்கை சார்ந்ததாக நீர்ம மாணிக்க படிமங்கள் அமைந்துள்ளன. இப்பிரதேசங்கள் சார்ந்ததாக கிடைக்கப் பெறுகின்ற மாணிக்க வகைகளில் நீலம் மற்றும் வெள்ளை குருவிந்த, கெவுட, அனைத்து வகைகளிலுமான கிரிஞ்சி, ஜாகுன்ஈ ரபஹ, நீல அபடைற் ஆகியன

முதன்மையானவையாகும். முழுமையாக நோக்குகின்றபோது இப்பிரதேசத்தில் மாணிக்க படிமம் 10 – 20 அடி வீச்சிடைகொண்ட ஆழத்தில் அமைந்துள்ளதோடு இது அதிக மாணிக்க சாத்தியத்தன்மை கொண்ட பிரதேச செயலாளர் பிரிவாகும்.



(அ) (ஆ)

படம் 02 – (அ) நீல குருவிந்த (blue sapphire)
(ஆ) மஞ்சள் குருவிந்த (yellow sapphire) மற்றும் ரோஜா கிரிஞ்சி (pink spinel) மாணிக்க துணிக்கைகளின் நுண்காட்டி அவதானிப்பு

2022 இறுதிக் காலாண்டினுள் நிதி ஏற்பாடுகள் இன்மையின் காரணமாக கிரிஎல்ல பிரதேச செயலாளர் பிரிவினுள் திட்டமிடப்பட்ட கள ஆய்வுகளை நிறைவு செய்வதற்கு இயலாமலிருந்தது. இக்கருத்திட்டத்தை 2023 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டினுள் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது

6.1.2.1 அயகம பிரதேச செயலாளர் பிரிவு

அயகம பிரதேச செயலாளர் பிரிவினுள் ஆரம்ப கள ஆய்வுப் பணிகளை ஆரம்பித்து ஏற்புடைய பிரதேச அதிகாரிகளுக்கு விழிப்புணர்வூட்டப்பட்டது. ஆரம்ப ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சுரங்கங்கள் சார்ந்ததாக மாதிகளை சேகரித்தல் மேற்கொள்ளப்பட்டது. வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை காரணமாக இக்கருத்திட்ட பணிகளை எதிர்வரும் ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட நேரிட்டது.



படம் 03 – அயகம பிரதேச செயலாளர் பிரிவில் ஆய்வுப் பணிகள்

6.1.2.2 பெல்மடுல்ல பிரதேச செயலாளர் பிரிவு


அதிக சாத்தியத்தன்மை கொண்ட பிரதேசங்களில் மாணிக்க அகழ்வு மேம்பாட்டுக்கான ஒரு செயலமர்வு நடத்தப்பட்டது.



படம் 04 – விழிப்புணர்வூட்டல் செயலமர்வு

6.3 கருத்திட்டம் :- மாணிக்க கற்களை மதிப்பீடு செய்வதற்கான ஒரு அடிப்படையை தயாரித்தல்


இக்கருத்திட்டத்திற்கமைய மாணிக்க கற்களை மதிப்பீடு செய்வதற்காக கணணிப் பிரயோகம் ஒன்று தயாரிக்கப்பட்டு இக்கருத்திட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளது.



படம் 06 – கணணி பிரயோகத்தின் உப முகப்புத் தோற்றம்

6.4 கருத்திட்டம் :- மாணிக்க சுரங்க நிலப்பரப்பை மீள்தாபிப்பதற்கான தொழில்நுட்ப வழிகாட்டல்

மாணிக்க சுரங்க நிலப்பரப்பை மீள்தாபிப்பதற்கான தொழில்நுட்ப வழிகாட்டல் உள்ளடங்கிய அறிக்கை நிறைவு செய்யப்பட்டுள்ளது. அது தொழில்நுட்ப விவரணத்திற்காக மொரட்டுவை பல்கலைக்கழகம் மற்றும் தேசிய மாணிக்க மற்றும் ஆபரண அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.




படம் 07 - மாணிக்க சுரங்க நிலப்பரப்பை மீள்தாபிப்பதற்கான தொழில்நுட்ப வழிகாட்டல் உள்ளடங்கிய அறிக்கை

6.5 கருத்திட்டம் :- மாணிக்கத்துக்கான பெறுமதி சேர்த்தலை மேம்படுத்தல்

6.5.1 லக்மினி வளி உலையின் மூலம் திக் சில்கி கெவுடாக்களின் நிறம் மற்றும் தெளிவுத் தன்மையை அதிகரிக்கச் செய்தல் பற்றிய கற்கை

திக் சில்கி மாதிரிகள் மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டதோடு, ED-XRF, ETIR, Raman மற்றும் UV- Visible தொழில்நுட்பங்கள் மூலம் இரசாயனப் பகுப்பாய்வுக்காக ஒவ்வொரு மாதிரிகளினதும் தட்டை முகப்புகள் தயாரிக்கப்பட்டன. ஆரம்ப இரசாயன பகுப்பாய்வின் பின்னர் அத்தகைய மாதிரிகள் ஒட்சிநீக்கம், ஒட்சியாக்க மற்றும் சிறிதளவு ஒட்சியாக்க நிலைமைகளின் கீழ் லக்மினி உலையின் மூலம் வெப்பமேற்றல் நடைபெற்றது. இதன்போது சிறிதளவு ஒட்சியாக்க நிலைமையின் கீழ் வெப்பமேற்றல் மூலம் மிகச் சிறந்த தெளிவுத் தன்மையையும் நிறத்தையும் பெற்றுக்கொள்ள இயலுமாயிருந்தது.

FTRI பெறுபேறுப் பகுப்பாய்வின் மூலம் வெப்பப் பரிகாரம் செய்யப்பட்ட மாதிரிகளைப் பிரித்தறியலாம் என்பது உறுதி செய்யப்பட்டது. Raman நிறமானியின் மூலம் குருவிந்தகளுக்கே உரித்தான 378, 418, 578 மற்றும் 751 ஆகிய தலைப்பு பண்புகள் அவதானிக்கப்பட்டன. UV – Visible தரவுப் பகுப்பாய்வின் மூலம் நீல நிறத்திற்கு $(Fe, Ti)^{+6}$ தொகுதியின் இடை அயன் ஏற்றப் பரிமாற்றம் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது உறுதி செய்யப்பட்டது. ED-XRF மூலம் வெப்பப் பரிகாரம் மூலம் விசேட இரசாயன மாற்றம் நடைபெற்றுள்ளதென்பதற்கான காரணிகள் அறியப்படவில்லை.



படம் 08 – ஒட்சிநீக்க நிலைமையின் கீழ் வெப்பமேற்றலின் மூலம் பெறப்பட்ட பெறுபேறு


படம் 09 - ஒட்சியாக்க நிலைமையின் கீழ் வெப்பமேற்றலின் மூலம் பெறப்பட்ட பெறுபேறு

படம் 10 – சிறிதளவு ஒட்சியாக்க நிலைமையின் கீழ் வெப்பமேற்றலின் மூலம் பெறப்பட்ட பெறுபேறு

6.5.2 மின் உலையின் மூலம் திக் சில்கி கெவுடாக்களின் நிறம் மற்றும் தெளிவுத் தன்மையை அதிகரிக்கச் செய்தல் பற்றிய கற்கை

திக் சில்கி மாதிரிகளின் இரசாயனப் பகுப்பாய்வுக்காக வெட்டி பட்டைதீட்டப்பட்ட முகப்புத் தோற்றமொன்று தயாரிக்கப்பட்டதோடு வெப்பப் பரிகாரத்திற்கு முன்னர் மற்றும் பின்னர் ED – XRF, FTIR, Raman மற்றும் UV – Visibles தொழில்நுட்பத்தின் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டது.

மாதிரி மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டு மின் உலையின் மூலம் ஏறத்தாழ 1700^0C வெப்பநிலையின் கீழ் 24 மணித்தியாளங்கள் வெற்றிடக் குழாய் நிலைமையின் கீழ், சாதாரண குழாய் நிலைமையின் கீழ் மற்றும் குழாயினுள் நைட்ரஜன் வாயு நிரப்பப்பட்டு வெப்பப் பரிகார ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. இதன்போது மிகச் சிறந்த நிற அதிகரிப்பை வெற்றிடக் குழாய் நிலைமையின் கீழான பரிகாரத்தின் மூலம் பெற்றுக்கொள்ள இயலுமாயிருந்தது.



படம் 11 – திக் சில்கி மின் உலையின் மூலம் வெப்பப் பரிகாரத்திற்கு முன்னர் மற்றும் பின்னர்

6.5.3 மின் உலையின் மூலம் புஷ்பராகம் பரிகாரத்திற்கான புதியதொரு முறையை அடையாளம்காணல்

புஷ்பராக மாதிரிகள் இரசாயன பகுப்பாய்வுக்காக வெட்டி பட்டைதீட்டப்பட்ட முகப்புத் தோற்றமொன்று தயாரிக்கப்பட்டதோடு வெப்பப் பரிகாரத்திற்கு முன்னர் மற்றும் பின்னர் ED – XRF, FTIR, Raman மற்றும் UV – Visibles தொழில்நுட்பத்தின் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டது. மாதிரி இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டு ஏறத்தாழ 1700^0C வெப்பநிலையின் கீழ் ஏறத்தாழ இருபத்துநான்கு மணித்தியாளங்களுக்கு தொடர்ந்து குழாயினுள் ஒட்சிசன் வாயு வழங்கப்படுதல் மற்றும் ஆரம்பத்தில் மாத்திரம் குழாயினுள் ஒட்சிசசன் வாயு நிரப்பப்படுதல் ஆகிய இரண்டு விதத்திலும் வெப்பமேற்றல் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது மிகச் சிறந்த நிற அதிகரிப்பை தொடர்ந்து ஒட்சிசன் வாயுவை குழாய்க்கு பெற்றுக் கொடுப்பதன் மூலம் பரிகாரம் செய்கின்றபோது பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது.



படம் 12 – பரிகாரத்திற்கு முன்னர்



படம் 13 – வளி உலையின் மூலமான பரிகாரத்தின் பெறுபேறு



படம் 14 – மின் உலையின் மூலம் பெறப்பட்ட பெறுபேறு

6.5.4 டன்சனைற் மின் உலையின் மூலம் வெப்பப் பரிகாரத்திற்கான மிகச் சிறந்த நிலைமைகளை அடையாளம்காணல்

டன்சனைற் மாதிரிகள் தொடர்பிலும் இரசாயன பகுப்பாய்வுக்காக முகப்புத் தோற்றமொன்று தயாரிக்கப்பட்டு வெப்பப் பரிகாரத்திற்கு முன்னர் மற்றும் பின்னர் ED – XRF, FTIR, Raman மற்றும் UV – Visibles ஆகிய தொழில்நுட்ப முறைகளை பயன்படுத்தி பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. மின் உலையின் மூலம் டன்சனைற் வெப்பப் பரிகாரத்திற்கான மிகச் சிறந்த நிலைமைகளாக 1550^0C வெப்பநிலையின் கீழ் வெற்றிடக் குழாய் நிலைமையினுள் பரிகாரம் செய்தல் அடையாளம்காணப்பட்டது.



படம் 15 – வெப்பப் பரிகாரத்திற்கு முன்னர்




படம் 16 – வெப்பப் பரிகாரத்திற்கு பின்னர்

6.5.5 லக்மினி வளி உலையின் மூலம் சிவப்பு கெவுடா வெப்பப் பரிகாரத்திற்கான புதியதொரு முறையியலை அடையாளம்காணல்

சிவப்பு கெவுடா கொள்வனவு செய்யப்பட்டதன் பின்னர் துப்புரவு செய்யப்பட்டு வெட்டி பட்டைதீட்டப்பட்ட முகப்புத் தோற்றமொன்று தயாரிக்கப்பட்டு ED – XRF, FTIR, Raman மற்றும் UV – Visibles மூலம் வெப்பப் பரிகாரத்திற்கு முன்னர் மற்றும் பின்னர் பகுப்பாய்வு செய்யப்பட்டது. லக்மினி வளி உலையின் மூலம் வெப்பப் பரிகாரத்திற்கான மிகச் சிறந்த நிலைமைகளாக $1550^{0}C$ வெப்பநிலையின் கீழ் ஒட்சியாக்க அறை வாயு மண்டல நிலைமையினுள் பரிகாரம் செய்து விரைவான குளிரூட்டலுக்கு உள்ளாக்கலை அடையாளம்காணக்கூடியதாக இருந்தது.



படம் 17 – விரைவான குளிரூட்டல் செயற்பாடு



படம் 18 – வெப்பப் பரிகாரம் செய்யப்பட்ட சிவப்பு கெவுட

6.6 கருத்திட்டம் :- இலங்கையின் ஆபரண உற்பத்திக் கலைஞர்களின் சரீரத்தில் உள்ளடங்கியுள்ள பாதரச அளவு தொடர்பில் உயிர் இரசாயன கற்கையை மேற்கொள்ளல்

இங்கு மேல் மாகாணத்தினுள் தெரிவு செய்யப்பட்ட ஆபரண உற்பத்திக் கலைஞர்கள் 84 பேருடைய சிறுநீர் மாதிரிகளில் உள்ள பாதரச அளவை தீர்மானித்தல் நடைபெற்றது. இதன்போது ஆபரண உற்பத்தியிலிருந்து நீக்கப்படுகின்ற கழிவுகளை பயன்படுத்தி தங்கத்தை பிரித்தெடுக்கின்ற ஆட்களின் சரீரத்தில் பாதரசம் உள்ளடங்குதல் உயர் பெறுமானத்தில் காணப்படுகின்றதென்பது அடையாளம்காணப்பட்டது.



படம் 19 – SSJS மூலம் சிறுநீர் மாதிரிகளை சேகரிப்பதற்கான ஒரு செயலமர்வு நடத்தப்படுதல்

இதன்படி அத்தகைய ஆட்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் பாதரசத்திற்கு பதிலாக பதிலீடுகளை பயன்படுத்தல் தொடர்பில் விழிப்புணர்வூட்டல் நடத்தப்பட வேண்டியுள்ளது.

6.7 கருத்திட்டம் :- ஆய்வுகூட தர முகாமைத்துவ முறைமையை தாபித்தல்

ISO 17025:2017 ஆய்வுகூட தராதரத்தின் கீழ் நிறுவன ஆய்வுகூட தராதரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்போது கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் ஆலோசனையின் கீழ் குறித்த நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. ஆய்வுகூட தர முகாமைத்துவம் பற்றிய முழுமையான செயற்பாடு 2023 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்படும்.

6.8 கருத்திட்டம் :- செயலமர்வுகள்

ரூபி மற்றும் சபாயா வெப்பப் பரிகாரம் பற்றிய புதிய தொழில்நுட்பவியல் அறிவை பெற்றுக்கொடுக்கும் பொருட்டு இரத்தினபுரி நிலையத்தில் 66 பேருடைய பங்கேற்புடன் ஒரு செயலமர்வு நடத்தப்பட்டது.




படம் 20 – தொழில்நுட்ப செயலமர்வு

6.9 கருத்திட்டம் :- வெளியீடுகளை வெளியிடுதல்

Publication of the manuscript in SCI Journals

6.9.1 C. P. Udawatte, S. Illangasinghe*, S. M. S. Abeyaweera, L. R. K. Perera, C. Weerasooriya, C. Sutthirat, N. Jayasinghe, T. Dharmaratne and S. Diyabalanage. Spectroscopical and Chemical Properties of Cobalt Diffused Blue Topaz, Sri Lanka. Accepted in the Journal of Metals, Materials and Minerals.

*Corresponding Author



படம் 21 – சஞ்சிகையின் மூலம் வரவேற்பை அறிவித்தல்

6.9.2 Jayasinghe, R.M.N.P.K. and Pitawala, H.M.T.G.A. 2022. Geomorphological and drainage morphometrical relationship of gem potential alluvial deposits in upper Kalu Ganga basin,

Sri Lanka: A remote sensing and GIS based approach. Journal of Geological Society of Sri Lanka, 22 (2), pp. 15-26.

6.9.3 Rifkhan, M.N.M., Wewegedara W.G.C.N., Jayasinghe R.M.N.P.K., Dharmaratne T.S., Malaviarachchi M.A.S.P.K, Chndrajith Rohana. 2022. Reddish-Brown Zircons of Sri Lanka; A Detailed Study and Development of a New Technique for Yellow to Golden Yellow Colour Enhancement. Journal of Geological Society of Sri Lanka, 22 (2), pp. 39-45.

6.10 நூல்களை வெளியிடுதல்

6.10.1 இலங்கையின் மாணிக்க சுரங்கக் கைத்தொழில் நிலைபேறானதொரு காலகட்டத்தை நோக்கி எனும் நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பான "Sri Lankan Gem Mining Industry for Sustainable Era" எனும் நூலை தொகுத்தல். இதனை 2022 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் அச்சிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் நிதி ஏற்பாடுகளின் பற்றாக்குறை காரணமாக 2023 ஆம் ஆண்டில் அச்சிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.



படம் 22 - "Sri Lankan Gem Mining Industry for Sustainable Era" நூல்

6.11 கருத்திட்டம் :- தொழில்நுட்ப சேவைகளை வழங்குதல்

6.11.1 தனியார் காணிகளில் மாணிக்கப் படிமங்களின் அகழ்வாராய்ச்சி

அவிசாவலை பிரதேசத்தில் தல்தூவ கிராமத்தில் தனியார் காணியில் மாணிக்க படிம அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.




படம் 05 – அகழ்வாராய்ச்சி நடவடிக்கைகள்

6.11.2 வெப்பப் பரிகார சேவை

பணம் அறவிட்டு மேற்கொள்ளப்படுகின்ற வெளிவாரி ஆட்களுக்கு கெவுடா வெப்பப் பரிகார சேவையை பெற்றுக் கொடுத்தலின் கீழ் லக்மினி உலையின் மூலம் 13 சேவைகளும் மின் உலையின் மூலம் 08 சேவைகளும் வழங்கப்பட்டு இவ்வாண்டினுள் ரூபா 246,000 வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

6.11.3 அதிதொழில்நுட்ப ஆய்வுகூட சேவை

ஆய்வுகூட பகுப்பாய்வுச் சேவைகளை வழங்குவதன் கீழ் நுனு-ஓசுகு பகுப்பாய்வு மாதிரிகள் 14 இன் மூலம் 2022 ஆம் ஆண்டினுள் ரூபா 351,900 தொகை நிறுவனத்தினால் ஈட்டப்பட்டுள்ளது.



நிர்வாகம் மற்றும் மனிதவள பிரிவு

வெளிவாரி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான ஊழியர் பங்கேற்பு – 2022
உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

#	பயிற்சி நிலையம்	பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	பங்குபற்றியோர்
1.	திறன் அபிவிருத்தி நிதியம் (SDFL)	அரச பெறுகைச் செயற்பாடு பற்றிய இரண்டு நாள் செயலமர்வு	1.திருமதி லஸ்னி சுரேந்திர (ஊதவிப் பணிப்பாளர் – ஆபரணம்) 2. திருமதி சுபாஷினி கோணார (பயிற்சி உத்தியோகத்தர்) 3. திரு. அசோக ராஜரத்ன (முகாமைத்துவ உதவியாளர்) 4. செல்வி எச்.எம்.என்.என்.கே. விஜேரத்ன (கணக்காய்வு உதவியாளர்)
2.	திறன் அபிவிருத்தி நிதியம் (SDFL)	போக்குவரத்து முகாமைத்துவம் பற்றிய இரண்டு நாள் செயலமர்வு	1. திருமதி கல்பனீ பெரேரா (முகாமைத்துவ உதவியாளர்)


DEBT
Savings
Deduction
Bills
69.928
63.772
44.870
48.991
20.556
31.012
26.417
11.311
12.002

நிதி பிரிவு

கணக்காய்வு செய்யப்பட்ட கடந்த 05 ஆண்டுகளுக்கான நிதித் தகவல்கள்					(ரூ.000)
	2018	2019	2020	2021	2022
தொழிற்பாட்டு வருமானம்					
திறைசேரி அளிப்புகள் மீண்டுவரும்	79,854.0	85,000.00	77,973.00	77,060.00	86,996.00
வேறு பங்களிப்புகள்	37,104.7	35,622.80	29,536.91	22,528,16	19,430.60
பாடநெறிக் கட்டணம்	10,835.1	12,212.03	12,409.64	3,542,50	15,529.05
சேவைக் கட்டண வருமானம்	76.5	308.0	72.5	12.00	246.00
புவிச் சரிதவியல் ஆராய்ச்சிச் சேவைகளின் பெறுகைகள்					
மொத்த தொழிற்பாட்டு வருமானம்	**127,870.3**	**133,142.83**	**119,992.05**	**103,142,66**	**122,201.65**
வேறு வருமானம்	2,114.2	1,690.02	1,042.83	837.49	1,742.04
வட்டி வருமானம்	519.4	553.42	457.21	283.71	466.03
வேறு பெறுகைகள்	25.59	60.48	4,680.0	1,564.0	
மொத்த வருமானம்	**130,529.49**	**135,446.75**	**126,172.10**	**105,837.39**	**124,409.73**
கழி:- செலவுகள்					
ஏ. ஊழியர் மற்றும் நிர்வாகச் செலவுகள்	88,935.0	98,994.18	**91,624.36**	84,691.33	**99,431.65**
பி. தேய்மானம் மற்றும் பொதுச் செலவுகள்	38.806.7	41,564.02	28,208.10	33,251.66	30,297.86
மொத்தச் செலவு	**127,741.78**	**140,558.20**	**119,832.46**	**117,943.00**	**129,729.51**
அதிகரிப்பு (குறைவு)	**2,787.6**	(5,111.45)	**6,339.64**	**(12,105.1)**	**(5,319.78)**

மாணிக்கம் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான வருமான செலவுக் கூற்று				
விபரம்	**2022**		**2021**	
	ரூபா '000	**ரூபா '000**	**ரூபா '000**	**ரூபா '000**
தொழிற்பாட்டு வருமானம்				
மீண்டுவரும் அளிப்புகள் - திறைசேரி		86,996.00		77,060.00
வேறு வருமானம்				
பாடநெறிக் கட்டணம்		15,529.05		3,542.50
கெவுடா வெப்பமேற்றல் கட்டணம்		246.00		12.0
வட்டி வருமானம்		466.03		293.71
பல்வேறு வருமானம்		1,742.04		837.50
13 ஆண்டு தொடர்ச்சியான கல்வி நிகழ்ச்சித்திட்டம்				1,564.00
தொழிற்பாட்டு வருமானம் மொத்தம்		**104,979.13**		**83,309.71**
கழி:- தொழிற்பாட்டுச் செலவு				
ஆளணிக்கான சம்பளம் மற்றும் படிகள்		57,278.25		51,666.29
பயணச் செலவு		72.60		53.11
வழங்கல் மற்றும் நுகர்வுப் பொருட்கள்		5,016.90		2,800.79
பராமரிப்புச் செலவு		4,568.33		2,062.29
உடன்படிக்கைச் சேவைகள்		28,282.47		25,743.55
பயிற்சிச் செலவு		3,413.72		1,908.07
வேறு தொழிற்பாட்டுச் செலவுகள்		774.80		443.61
தொழிற்பாட்டுச் செலவு மொத்தம்		**99,407.07**		**84,677.71**
தொழிற்பாட்டின் மூலம் பெற்ற அதிகரிப்பு / (குறைவு)		**5,572.06**		**1,368.0**
கழி: - நிதிச் செலவு		(24.57)		(13.62)
மூலதனச் செலவுகளுக்கான ஏற்பாடு	16,876.10		17,917.47	
வேறு பெறுகைகள்				
	16,876.10		17,917.47	
கழி:- தேய்மான பதிவழிப்புச் செலவு	(27,743.37)	(10,867.20)	(28,640.97)	10,723.50
வேறு மூலதன முதலீட்டு ஏற்பாடு	(2,554.50)		4,610.61	
கழி:- மூலதன முதலீட்டுச் செலவு	(2,554.50)		(3,935.71)	
மூலதன சொத்துக்கள் அபிவிருத்தி			(674.90)	
வேறு மூலதன முதலீடுகளின் தேறிய செலவு		(5,319.78)		(12,105.12)
தொழிற்பாடு அல்லாத வருமானம்				
கூட்டுக – தொத்துகளை விற்றுப் பெற்ற வருமானம்				
அதி விசேட விடயங்களுக்கு முன்னர் அதிகரிப்பு / (குறைவு)		(5,319.78)		(12,105.12)
அதி விசேட விடயங்கள்				
காலகட்டத்திற்கான தேறிய அதிகரிப்பு / (குறைவு)		(5,319.78)		(12,105.12)
கூட்டுக				
முந்திய ஆண்டுக்காள அதிகரிப்பு / (குறைவு)	(39,308.94)		(31,479.11	
கழி: முந்திய ஆண்டுக்கான சீர்செய்தல்		(2,930.13)		4,275.30
தேறிய அதிகரிப்பு / (குறைவு)		**(47,558.85)**		**(39,308.93)**

மாணிக்கம் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் 2022 திசெம்பர் 31 ஆம் திகதிக்கான ஐந்தொகை				
	2022		2021	
விபரம்	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000
நடைமுறைச் சொத்துக்கள்				
ஆதனங்கள் இயந்திர சாதனங்கள்	101,259		129,378	
பணிக்கொடை நிதியம்	955	102,214	2,272	131,650
நடைமுறைச் செத்துக்கள்				
கையிருப்பு மற்றும் நுகர்வுப் பொருட்கள்	4798		3,798	
விற்பனைக்கான புத்தகங்கள்				
கடன் மற்றும் முற்பணம்	3362		1,847	
நிலையான வைப்புக் கணக்கு	4304		3,980	
வைப்புகள்	630		610	
வியாபாரம் மற்றும் ஏனைய பெறத்தக்க கணக்குகள்	7483		8,429	
வறுமை ஒழிப்புக் கருத்திட்டம்	1559		3,577	
முற்கொடுப்பனவு	202		125	
காசு மற்றும் வங்கி	9114	27,148	8,793	27,179
சொத்துக்கள் மொத்தம்		133,666		162,809
பொறுப்புகள்				
நடுமமறைமுறைப் பொறுப்புகள்				
செலுத்த வேண்டிய கணக்குகள்	604		599	
அட்டுறு செலவுகள்	4336	4,940	6,727	7,326
நடைமுறையல்லாத பொறுப்புகள்				
Minimata கருத்திட்டம்	179		570	
பணிக்கொடைக்கான ஒதுக்குகள்	13350		14,172	
தேசிய விஞ்ஞான மன்றம்		13,529		14,742
பொறுப்புகள் மொத்தம்		18,469		22,068
தேறிய சொத்துக்கள் மொத்தம்		**115,197**		**140,741**
தேறிய சொத்துக்கள் / பங்குத் தொகுதி				
பங்கேற்பு மூலதனம்	50000		50,000	
ஒதுக்கு – மாணிக்கம்	43772		43,772	
வேறு பங்களிப்புகள்	850		850	
ஊழியர் சுழற்சி நிதியம்	1857		1,721	
பிற்போடப்பட்ட வருமானம் ரூபா மூலதன ஏற்பாடு	66276		83,706	
திரண்ட நிதியம்	(47,558)		(39,308)	
தேறிய சொத்துக்கள் பங்குத் தொகுதிகள் மொத்தம்		**115,197**		**140,741**

:

உதவிப் பணிப்பாளர் (நிதி)

திகதி : 2023.05.09

தலைவர்

திகதி : 2023.05.09

பணிப்பாளர் சபை அங்கத்தவர்

திகதி : 2023.05.09

மாணிக்கம் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் 2022.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று		
விபரம்	**2022**	**2021**
தொழிற்பாட்டுக் கருமங்களின் காசுப் பாய்ச்சல்		
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து பெற்ற அதிகரிப்பு (குறைவு)	(5,319.77)	(12,105.12)
நிதியல்லாத கொடுக்கல் வாங்கல்		
தேய்மான ஒதுக்கு	27,743.37	28,640.97
வட்டி	(466.03	(293.71)
பிற்போடப்பட்ட வருமான சீர்செய்தல்	(19,430.61)	(22,528.16)
முந்திய ஆண்டின் சீர்செய்தல்கள்		
கொடுப்பனவுகள் அரிகரிப்பு / குறைவு		
ஏனைய நடைமுறைச் சொத்துக்களில் அதிகரிப்பு / குறைவு	(2,126.89)	610.55
ஆதனங்கள், இயந்திர சாதனங்கள் விற்பனை மீதான இலாபம்	(13.66)	
தவணைக் குத்தகை வாடகை	473.48	473.48
பணிக்கொடை ஒதுக்கீடு	2,939.77	(479.25)
நிலையான சொத்துக்கள் சீர்செய்தல்	(8.82)	(41,660.52)
பணிக்கொடை கொடுப்பனவு	(3,761.43)	(2,134.27)
ஏனைய நடைமுறைச் சொத்துகளில் அதிகரிப்பு	(1,331.63)	2,866.50
செலுத்த வேண்டிய பணிக்கொடை		
ஒதுக்குகள்		41,660.52
தொழிற்பாட்டு செயற்பாடுகளின் தேறிய காசுப்பாய்ச்சல் (அ)	**(1,302.23)**	**(3,990.53)**
முதலீட்டுக் கருமங்களின் காசுப் பாய்ச்சல்		
இயந்திர உபகரணங்கள் கொள்வனவு	(89.65)	(3,136.4)
பணிக்கொடை நிதியத்தின் அதிகரிப்பு	1,316.79	(1,000.7)
வட்டி வருமானம்	602.45	450.37
நிலையான வைப்புகள் அதிகரிப்பு/ குறைப்பு	(324.42)	1,932.2
சொத்துக்கள், இயந்திர, உபகரணங்கள் விற்பனை மீதான இலாபம்	13.66	
அனர்த்தக் கடன் கொடுப்பனவு	(2,743.05)	(1,364.44)
அனர்த்தக் கடன் கிடைப்பனவு	1,238.72	1,827.31
முதலீட்டுக் கருமங்களின் தேறிய காசுப் பாய்ச்சல் (ஆ)	**14.51**	**(1,291.57)**
நிதியியல் கருமங்களின் காசுப் பாய்ச்சல்		
மூலதன அளிப்பு	2,000.00	5,024.0
Minimata கருத்திட்டம்	(391.82)	300.4
தேசிய விஞ்ஞான மன்ற நிதியம்		(1,310.4)
நிதியியல் செயற்பாடுகளின் காசுப் பாய்ச்சல் (இ)	**1,608.18**	**4,013.95**
காசு மற்றும் நிதியியல் விடயங்களின் தேறிய அதிகரிப்பு / குறைவு (அ)(ஆ)(இ)	320.46	(1,268.15)
ஆரம்ப காசு / நிதி மீதி	8,793.22	10,061.37
ஆண்டின் இறுதியில் காசு / நிதி மீதி	**9,113.68**	**8,793.22**

தலைவர்
இரத்தினக் கல் மற்றும் தங்காபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

இரத்தினக் கல் மற்றும் தங்காபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 2022 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான மற்றும் கண்காணிப்புத் தேவை தொடர்பான 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

இரத்தினக் கல் மற்றும் தங்காபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மாற்றக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், சுருக்கமான முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க கூட்டாகக் கூறப்பட வேண்டிய 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும், 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது ஆணையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பு சட்டத்தின் 154 (6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை எதிர்வரும் காலப் பகுதியில் பாராளுமன்றத்துக்கு முன் வைக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழிப்புள்ள அபப்பிராயம் தொடர்பான பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் மூலமான தாக்கங்களைத் தவிர்த்து, நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களின் ஊடாக 2022 டிசம்பர் 31 ஆம் திகதியிலிருந்த படியான நிதி நிலைமை மற்றும் அத் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடுகள் மற்றும் நிதியோட்டம் இலங்கை பொது துறையின் கணக்கீட்டுத் தராதரங்களின் பிரகாரம் உண்மையான மற்றும் நியாயமான நிலையைக் காட்டுவதாக நான் கருதுகின்றேன்.

1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) கலந்தாலோசிப்பு வருட கால கட்டத்தின் இறுதியில் முற்று முழுதாகத் தேய்மான மேற்கொள்ளப்பட்டிருப்பினும், மேலும் பயன்பாட்டிலுள்ள செலவின் பெறுமானம் ரூபா 53,558,228 ஆன சொத்துக்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிக் காட்டப்படவில்லை. அவ்வாறே, இலங்கை பொதுத் துறை கணக்கீட்டுத் தராதரம் 03 இன் பிரகாரம் இத்தகைய சொத்துக்களின் வாழ் தகவு காலப் பகுதி தொடர்பாக மீள் ஆராய்ந்து நிதிக் கூற்றுக்களில் ஒப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சொத்துக்களின் விபரக் குறிப்பு மற்றும் உபகரணங்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 2,301,575 ஆன இரத்தினக் கற்களின் அளவு நான்கு வருடங்களைத் தாண்டியும் மீள் மதிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) வங்கிக் கணக்கு இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம், 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு வங்கியில் நேரடியாக வைப்பு செய்யப்பட்ட பணத்தின் பெறுமதி ரூபா 1,635,470 ஆகக் காணப்பட்டதுடன், இம் மீதியினுள் உள்ளடக்கப்பட்டுள்ள 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் வங்கியில் நேரடியாக வைப்பிலிடப்பட்டிருந்த பெறுமதி ரூபா 319,710 ஆகக் காணப்பட்டாலும் இந் நேரடி வைப்புகள் யாவை எனும் விடயம் தொடர்பாக அடையாளம் கண்டு நிதிக் கூற்றுக்களில் ஒப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இல.கண.நிய) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புகள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள் எனும் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு என்னால் பெறப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சியங்கள் போதியளவாகவும், பொருந்தக் கூடிய அடிப்படையிலும் காணப்படுவதாக நான் நம்புகின்றேன்.

1.3 நிறுவனத்தின் 2022 வருடாந்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ள ஏனைய தகவல்கள்

இக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன் என்னால் பெறப்பட்ட அவதானிப்புகள் நிறுவனத்தின் 2022 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருப்பினும், நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பான எனது கருத்துறைகள் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்காத தகவல்கள் மற்றும் ஏனைய தகவல்கள் எனும் வகுதியின் கீழ் எடுத்துறைக்கப்பட்டுள்ளது. இவ் ஏனைய தகவல்கள் தொடர்பில் முகாமைத்துவம் பொறுப்பு கூற வேண்டியுள்ளது.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தின் மூலம் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படாதிருப்பதுடன், அது தொடர்பாக நான் எவ்விதத்திலும் சான்றுபடுத்துகையோ அல்லது முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்தையோ தெரிவிக்க மாட்டேன்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கணக்காய்வுடன் தொடர்புடையதாக எனது பொறுப்பாக மேற்குறித்த அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களை வாசித்தல் மற்றும் அத்தகைய அடிப்படையில் செயற்படுகையில் ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது பிரிதொரு விதமாக பெறப்பட்ட எனது அறிவின் பிரகாரம் போதியளவில் பொருந்தாதிருக்கின்றதா என்பதைக் கருத்திலெடுப்பதாகவுள்ளது.

இக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன் என்னால் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையிலும், என்னால் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகளின் அடிப்படையிலும், இவ் ஏனைய தகவல்கள் அளவீட்டு ரீதியாக பிழையாகக் குறிப்பிடப்பட்டிருப்பதாக நான் கருதுவதாயின் அவ் விடயங்கள் என்னால் அறிக்கையிடப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது. இது தொடர்பாக அறிக்கையிடுவதற்கு எனக்கு எவ்விடயமும் காணப்படுவதில்லை.

1.4 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும், அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக் கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும், நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக் கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன் முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக் கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நிதிக் கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதும், எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பெரும்பாண்மையான பிறழ் கூற்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ் கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக் கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித் தனியாகவோ அல்லது கூட்டாக ஒட்டு மொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக் கூடுமென நியாயமாக எதிர்ப்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர் தொழில் திரிபுகளை நான் மேற்கொண்டு உயர் தொழில் ஐயப்பாட்டினை பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக் கூற்றுக்களிற்கு ஏற்படக் கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங் கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர் கொள்ளக் கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்ளுதல், மோசடியானது கூட்டுச் சதி, கள்ளத் தனம், வேண்டுமென்று விட்டி விடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றைக் கண்டிபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது, தவறின் மூலமான விளைவொன்றை விடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற் திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும், கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக் கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்துக்குக் காணப்படுகின்ற ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாடிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக் கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது

முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்க்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடை நிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக் கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக் கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் மூலம் அடையாளம் காணப்பட்ட கணக்காய்வு கண்டறிவுகள், பிரதான உள்ளக நிர்வாக குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் நிர்வாகத் தரப்பினரை அறிவூட்டுகின்றேன்.

2. ஏனைய சட்ட திட்டங்கள் மற்றும் கண்காணிப்பு தேவைகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட நிதியங்கள் உள்ளடங்கியுள்ளன.

2.1.1 எனது அறிக்கையில் முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் கீழான தாக்கங்களைத் தவிர்த்து, 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (அ) ஆவது பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம், கணக்காய்வுக்குத் தேவையான அனைத்து தகவல்களும், வளக்கப்படுத்துகைகளும் என்னால் பெறப்பட்டதுடன், எனது பரீட்சிப்பின் பிரகாரம் அடையாளம் காணப்பட்ட வகையில் நிதி அறிக்கைகளை நிறுவனம் பேணியிருக்கவில்லை.

2.1.2 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் பொருந்தக் கூடியதாகவுள்ளன.

2.1.3 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iv) ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் கடந்த வருடம் என்னால் முன் வைக்கப்பட்ட சிபாரிசுகள், முன் வைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட செயன் முறைகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சாட்சியங்களின் பிரகாரமும், போதியளவான விடயங்களுக்கு வரையறுக்கப்பட்டமையாலும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுக்களை முன் வைப்பதற்குப் போதியளவான விடயங்கள் எனது கண்காணிப்பிற்கு உள்ளாகவில்லை.

2.2.1 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் நிறுவனத்தின் நிர்வாக சபையின் ஏதாவதொரு அங்கத்தவருக்கு நிறுவனத்துடன் தொடர்புபட்ட ஏதாவதொரு ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாக அல்லது எந்தவொரு பிற அடிப்படையிலும் சாதாரண வர்த்தக நிலைகளுக்குப் புறம்பாக தொடர்புபட்டிருப்பதாக.

2.2.2 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் அடிப்படையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளைத் தவிர ஏதாவதொரு தொடர்புடைய எழுத்து மூலமான சட்டத்திற்கு அல்லது நிறுவனத்தின் நிர்வாக சபையினால் வெளியிடப்பட்ட பிரிதொரு பொது அல்லது விசேட ஏற்பாடுகளின் பிரகாரத்துக்கு ஏற்புடையதாகாத வண்ணம் செயற்பட்டிருப்பதாக.

2.2.3 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் நிறுவனத்தின் அதிகாரங்கள், நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளின் பிரகாரம் அமையாத வண்ணம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக.

2.2.4 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வளங்களை மிகச் சிக்கனமாகவும், வினைத் திறன் மிக்கதாகவும் செயற் திறன் மிக்கதாகவும் குறித்த காலப் பகுதிகளில் தொடர்புடைய சட்ட திட்டங்களுக்கு ஏற்ப பெறுகை செயற்பாடு பின்பற்றப்படவில்லையென.

03. ஏனைய விடயங்கள்

(அ) நிறுவனத்தின் கணக்குச் செயற்பாடுகள் தொடர்பாக 2017 ஆம் ஆண்டில் ரூபா 346,035 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட கணக்கீட்டு மென் பொருள் செயலித் தொகுதி, 06 வருட காலப் பகுதி கடந்திருப்பினும் அதில் காணப்பட்ட குறைப்பாடுகள் காரணமாக அத் தொகுதியைப் பயன்படுத்தி கணக்கீட்டு செயன் முறைகள் முன்னெடுக்கப்படாதிருந்ததுடன், இம் மென் பொருளைப் பயன்படுத்துகையில் மேற்கொள்ள வேண்டிய மென் பொருள் புதுப்பிப்பு மற்றும் பராமரிப்புச் செயற்பாடுகள் தொடர்பாக சேவை உடன் படிக்கையொன்றும் காணப்படவில்லை.

(ஆ) நிறுவனத்தின் இரத்தினபுரி மாவட்ட அலுவலகத்தை நிர்மாணிக்கும் பொருட்டு 2016 ஆம் ஆண்டில் ரூபா 14,204,402 ஆன பணத் தொகை செலவிடப்பட்டு, 30 வருட கால குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட காணியில், ஆய்வுக்குட்படுத்தப்பட்ட ஆண்டு காலப் பகுதி வரை தொடர்புடைய பணிகள் முன்னெடுக்கப்படாமையால் 06 வருடத்துக்கும் அதிகமான காலப் பகுதியிலிருந்து இக் காணி குறை பயன்பாடாகக் காணப்பட்டது.

(இ) அதிகமாக செலுத்தப்பட்ட மீதியினுள், 04 உத்தியோகத்தர்களிடமிருந்து தவணை அடிப்படையில் அறவிடப்பட வேண்டிய எனினும் அத்தகைய அடிப்படையில் அறவிடப்படாத ரூபா 466,762 ஆன மொத்த பணத் தொகை உள்ளடங்கியிருந்தது.

(ஈ) நிறுவனத்தின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியிலிருந்த அனுமதிக்கப்பட்ட பணிக் குழு 136 ஆகவும், உண்மையான பணிக் குழு 65 ஆகவும் காணப்பட்டதுடன், 71 பதவிகள் அதாவது அனுமதிக்கப்பட்ட பணிக் குழுவின் நூற்றுக்கு 52 ஆன பதவி வெற்றிடம் காணப்பட்டது. இப் பதவி வெற்றிடங்களில் முது நிலை பதவிகளான பணிப்பாளர் நாயகம் பதவி, பணிப்பாளர் (ஆராய்ச்சி) ஆகிய பதவிகள் வெற்றிடங்களாகவுள்ளன. மேலும், ஆராய்ச்சிச் செயற்பாடுகள் தொடர்பாக அனுமதிக்கப்பட்ட 29 எண்ணிக்கையான பணிக் குழுவில் 24 ஆன எண்ணிக்கை வெற்றிடமாகவிருப்பதுடன், பயிற்சி நடவடிக்கைகளை தொடர்பாக அனுமதிக்கப்பட்ட 33 எண்ணிக்கையான பணிக் குழுவில் 19 ஆன எண்ணிக்கை வெற்றிடமாகவிருப்பதன் காரணமாக ஆராய்ச்சிகளையும், பயிற்சி நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதில் இவ் விடயம் பெருமளவில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

டப்ளியு.பீ.சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி